# NSW HEALTH

## COVID-19 Key Points – Thursday 21 October 2021

- நியூ சவுத் வேல்ஸ் முழுவதும், இப்போது 11.8 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன! 16 வயதுக்கு மேற்பட்ட மக்களில் 92.5% ஆனோர் தடுப்பூசியின் முதல் மருந்தளவு ஒன்றைப் பெற்றுள்ளனர், அத்துடன் 82.3% ஆனோர் இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.
- 12-15 வயதிற்குட்பட்டவர்களில் 76.1% ஆனோர், தடுப்பூசியின் ஒரு மருந்தளவைப் பெற்றுள்ளனர் மற்றும் 40.9% ஆனோர் இப்போது முழுமையாகத் தடுப்பூசியைப் போட்டுள்ளனர். இது ஒரு சிறந்த சாதனை ஆகும்.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 372 கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர். கவலைக்கிடமாக, ஒருவர் உயிரிழந்துள்ளார்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன்வந்த எல்லோருக்கும் மற்றும் எங்கள் மாநிலம் முழுவதும் தடுப்பூசிகளைச் செலுத்திவரும் அனைத்துப் பொது மருத்துவர்கள் (ஜி.பி - GP), மருந்தாளர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் நன்றி.
- நீங்கள், கோவிட்-19 உள்ள ஒருவருடன் நெருக்கமாக அல்லது தற்காலிகமாகத் தொடர்பில் இருப்பவர் என்றால், அல்லது உங்களுக்கு ஏதேனும் நோயறிகுறிகள் இருந்தால், அவை எவ்வளவு இலேசானவை என்பது ஒரு பொருட்டல்ல, நீங்கள் முழுமையாகத் தடுப்பூசியைப் போட்டிருந்தாலும்கூட, கட்டாயமாகத் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகி, உடனடியாகப் பரிசோதனையைச் செய்துகொள்ள வேண்டும்.
- லைட்னிங் ரிட்ஜ் (Lightning Ridge), ஆர்மிடேல் (Armidale), யூரல்லா (Uralla), இன்வெரெல் (Inverell) மற்றும் நிங்கன் (Nyngan) உள்ளிட்ட, நோய்த்தொற்றாளர்கள் எவரும் அறியப்படாத பகுதிகளில் கழிவுநீரில் நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளமை குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம். இந்தப் பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்கள், நோயறிகுறிகளின் ஆரம்பத்தைக் கண்காணிக்குமாறும், பரிசோதனையைச் செய்துகொள்ளுமாறும் வலியுறுத்தப்படுகின்றனர்.
- அடுத்த வாரம், இன்னும் அதிகமான மாணவர்களை மீண்டும் வகுப்பறைக்கு வரவேற்க நாங்கள் காத்திருக்கிறோம். குறிப்பாக தென்மேற்கு சிட்னி (South Western Sydney) மற்றும் ஹண்டர் (Hunter) பகுதியில் உள்ள இளையோர்களை வந்து தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.
- இந்தச் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும், 12-15 வயதுக்குட்பட்டவர்களுக்காக, நேரடியாகச் செல்லக்கூடிய சிறப்பு மருத்துவ நிலையங்களை (special walk-in clinics), நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த் (NSW Health) நடாத்துகிறது. உங்களுக்கு அருகில் உள்ள மருத்துவ நிலையத்தின் இருப்பிடத்தை nsw.gov.au -இல் சரிபார்க்கவும்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதற்கும், சுகாதார ஆலோசனையைப் பின்பற்றுவதற்கும், அத்துடன் பரிசோதனையைச் செய்துகொள்ளத் தொடர்ந்தும் முன்வருவதற்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி. உங்கள் முயற்சிகள், எம் அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகின்றன.